

13.11.2026 செய்திகள்

தமிழகத்தில் 5.77 கோடி வாக்காளர்கள்

- தமிழகத்தில் சிறப்பு சுருக்கமுறை திருத்தப் பணிக்கு (எஸ்.எஸ்.ஆர்) பிறகு 5.77 கோடி வாக்காளர்கள் கொண்ட வரைவுப் பட்டியல் வெளியிடப்பட்டது.
- அதில், ஆண் வாக்காளர்கள் 2,82,03,992 பேரும், பெண் வாக்காளர்கள் 2,95,34,734 பேரும் மூன்றாம் பாலினத்தவர் 7,892 பேரும் அடங்குவர்.
- மாநிலத்திலேயே அதிகமான வாக்காளர்களைக் கொண்ட சட்டப்பேரவைத் தொகுதியாக 5,58,729 வாக்காளர்களுடன் செங்கல்பட்டு மாவட்டம் சோழிங்கநல்லூர் தொகுதி உள்ளது.
- குறைந்த அளவு வாக்காளர்களைக் கொண்ட சட்டப்பேரவைத் தொகுதியாக 1,20,852 வாக்காளர்களுடன் சென்னை மாவட்டத்தின் துறைமுகம் தொகுதி உள்ளது.
- வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லாதவர்களும் படிவம் 6-இல் விண்ணப்பிக்கலாம். வெளிநாடு வாழ் வாக்காளர் பெயரை வாக்காளர் பட்டியலில் சேர்க்க படிவம் 6-ஏ, பெயரைச் சேர்க்கவும், நீக்கவும், ஆட்சேபணை தெரிவிக்க படிவம் 7, தொகுதி மாற்றம் செய்யவும், திருத்தம் செய்யவும், மாற்று வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை பெறுவதற்கும் படிவம் 8 ஆகியவற்றில் விண்ணப்பிக்க வேண்டும் என்று அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார்.

சூரியனை பூமி சுற்றுகிறது என ஆரியபட்டர் கூறினாரா?

» ஆரியபட்டீயம் சொல்வது என்ன?

- ஆரியபட்டர் தம் காலத்தை விஞ்சிய சிந்தனையாளர் என்பதில் ஐயமில்லை. பொ.ஆ.(கி.பி.) 499 இல், தமது 23 ஆவது வயதிலேயே புகழ்பெற்ற 'ஆரியபட்டீயம்' என்கிற நூலை அவர் இயற்றினார்.
- இந்த நூல் நான்கு பகுதிகளைக் கொண்டது. அவற்றில் கோளபாதம் (கோளாத்யாயம்) என்கிற பகுதியில் பல புரட்சிகரமான கருத்துகளை அவர் முன்வைத்தார்.
- பூமி எவ்வித ஆதாரமும் இன்றி விண்வெளியில் மிதக்கும் ஒரு கோளம் என்பதைத் தெளிவாகக் கூறினார். விண்மீன்கள் நாள்தோறும் வானில் நகர்வதுபோல் தோன்றுவதற்குப் பூமி தன் அச்சில் சுழல்வதே காரணம் என்றும் விளக்கினார்.
- நான்கு பூதங்களான மண், நீர், நெருப்பு, காற்று ஆகியவற்றால் ஆன உருண்டையான பூமி, விண்மீன்களில் கூடு அல்லது கோளத்தின் நடுவே, விண்வெளியின் மையத்தில் அமைந்துள்ளது.
- அதைச்சுற்றிக் கோள்களின் சுற்றுப்பாதைகள் அமைந்துள்ளன. இது தெளிவாக ஒரு புவிமைய அண்ட அமைப்பையே சுட்டுகிறது.
- பாஸ்கரர் உள்ளிட்ட பல அறிஞர்கள் எழுதியுள்ள உரைகள் அந்த ஐயத்தைப் போக்குகின்றன. கமத்யம் என்பது விண்வெளியின் சரியான மையத்தையே குறிக்கிறது என்பதை அவர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர்.
- எனவே, இந்த அண்ட அமைப்பின்படி பூமியே மையம்; பூமியைச் சுற்றியே சூரியன் உள்ளிட்ட கோள்கள் இயங்குகின்றன.

» நுட்பமான வேறுபாடு

- அப்படியானால், ஆரியபட்டரைச் சூரிய மையக் கோட்பாட்டுடன் தொடர்புபடுத்தும் கருத்து எங்கிருந்து தோன்றியது? கோள்களின் இயக்கத்தைக் கணக்கிடுவதற்கு இரண்டு வகையான துணைவட்டக் கணித முறைகளை ஆரியபட்டர் பயன்படுத்தினார்.
- அவை சீக்ர, மந்த எனப்பட்டன. இவற்றில் சீக்ர துணைவட்டங்களின் சுற்றுக்காலங்கள், அந்தந்தக் கோள்களின் சூரிய மையச் சுற்றுக்காலங்களுடன் அடிப்படையில் ஒத்துப்போகின்றன எனக் கணிதவியலாளர் பி.எல்.வான் டெர் வார்டன் 1970 இல் வாதிட்டார்.
- இந்தக் கணித மதிப்புகள் ஒன்றுடன் ஒன்று பொருந்துவதையும் அவர் காட்டினார். ஆனால், இந்தச் சுற்றுக்காலங்கள் சூரிய மைய அமைப்பைச் சார்ந்தவை என்பதை ஆரியபட்டர் உணர்ந்திருந்தார் என்றோ, அவர் சூரிய மையக் கோட்பாட்டை முன்வைத்தார் என்றோ வார்டன் கூறவில்லை.
- ஆனால், பிற்காலத்தில் பலர் இந்த நுட்பமான வேறுபாட்டைப் பொருட்படுத்தாமல், சூரிய மையக் கோட்பாட்டை ஆரியபட்டர் ஏற்கெனவே கண்டுபிடித்துவிட்டார் என்று கூறத் தொடங்கினர். இந்தக் கூற்று வரலாற்றுத் திரிபு.

» வரலாற்றுத் திரிபு

- நியூட்டனுக்கு முன்பே இந்தியர்கள், குறிப்பாக இரண்டாம் பாஸ்கராச்சாரியார் ஈர்ப்பு விசையைக் கண்டுபிடித்துவிட்டார் என்று சிலர் கூறுவதும் மற்றொரு பொதுவான திரிபாகும். பஞ்சபூதங்களில் ஒன்றான நிலப்பூதத்தால் (பிருத்வி) ஆன கனமான பொருள்களுக்கு 'குருத்வம்' என்கிற இயல்புப் பண்பு உண்டு என்று கருதப்பட்டது.
- இந்தப் பண்பின் காரணமாகவே மேலே எறியப்பட்ட கல் போன்ற பொருள்கள் மீண்டும் பூமியை நோக்கி விழுகின்றன என்பது இதன் அடிப்படைக் கருத்து.
- இந்தக் கருத்து இரண்டாம் பாஸ்கராச்சாரியாருக்கு மிகவும் முற்பட்டது. ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகள் பழமையான நியாய-வைசேடிக சூத்திரம் 5.1.7 இலேயே இது இடம்பெற்றுள்ளது.
- பிரம்மகுப்தரும் அவருக்குப் பிற்காலத்தில் வந்த இரண்டாம் பாஸ்கராச்சாரியாரும் இதே கருத்தை மீண்டும் எடுத்துரைத்தனர்.
- ஆனால், அதே சூத்திரம் இந்தப் பண்பு நிலப்பூதத்துக்கே உரியது என்றும் ஆகாயம், நெருப்பு ஆகிய பூதங்களுக்கு இது பொருந்தாது என்றும் கூறுகிறது.
- இந்தத் தத்துவச் சிந்தனையின்படி, காற்றும் பூமியை நோக்கி ஈர்க்கப்படுவதில்லை. நிலப்பூதம் தொடர்புடைய பொருள்களுக்கே குருத்வம் பொருந்தும்.
- இது நியூட்டனின் ஈர்ப்புக் கோட்பாட்டிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. நியூட்டனின் கோட்பாடு, எந்த இரண்டு நிறைகளுக்கும் இடையே செயல்படும் பரஸ்பர ஈர்ப்பு விசையை அளவிட்டுக் கணக்கிடுகிறது.
- அந்த விசை, இரண்டு பொருள்களின் நிறைகளின் பெருக்கத்துக்கு நேர்விகிதத்திலும், அவற்றுக்கு இடையிலான தொலைவின் வர்க்கத்துக்கு எதிர்விகிதத்திலும் அமைகிறது.

» மாணவர்களுக்கு எது தேவை?

- இதுபோன்ற தவறான கூற்றுகளின் பட்டியல் நீளமானது. அனைத்துப் பொருள்களும் மிகச் சிறிய துகள்களால் ஆனவை என்றும், அவற்றை 'அணு' என்றும் கணாதர் முனிவர் அழைத்தார்.
- அவரது சமகாலத்தவர்களான கிரேக்கத் தத்துவ அறிஞர்களும் இதேபோன்ற கருத்தை முன்வைத்தனர். அவர்கள் துகள்களை 'ஆட்டம்' என்று அழைத்தனர்.
- இந்த இரு தரப்பினரின் கருத்துகளும் இன்று நாம் அறிந்துள்ள நவீன அணுக் கொள்கைக்கு இணையானவை அல்ல.
- இரண்டு தரப்பினருமே இத்தகைய துகள்கள் இருக்கக்கூடும் என்று தத்துவ அடிப்படையில் சிந்தித்தார்களே தவிர, அவற்றைச் சோதனைகள் மூலம் நிறுவவில்லை.
- மேலும், எந்தப் பொருளையும் தொடர்ந்து சிறுசிறு பகுதிகளாகப் பிரித்துக்கொண்டே சென்றால், இறுதியில் மேலும் பிரிக்க முடியாத மிகச்சிறிய துகள் ஒன்று இருக்கும் என்று கருதினர்.